Suppression of Immoral Traffic Act

* 227 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether it is a fact that in the Suppression of Immoral Traffic Act only women are prosecuted and not the accessories ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

விபச்சார விடுதியை வைத்திருக்கிற அல்லது நடத்துகிற அல்லது விபச்சாரம் செய்வதால் கிட்டும் வருமானத்தைக் கொண்டு வாழ்கிற அல்லது விபச்சாரத்துக்காகக் காமத் தாகராய்ப் பணிபுரிகிற அல்லது பரத்தமைக்காகப் பெண்களை கொணர்கிற விபசாரத்துக்குத் தூண்டுகிற அல்லது விபச்சாரத்துக்காக மகளிர் அல்லது பெண்களை எடுத்துக்கொள்கிற எந்த நபர்மீதும் வழக்கு தொடர்வதற்கு மகளிர் பெண்கள் விபச்சார ஒழிப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் வகை செய்கின்றன.

மேற்கூறிய சட்டத்தின் கீழ், பரத்தமை நடக்கும் வளவில், மகளிர் அல்லது பெண்களை வைத்திருக்கிற அல்லது அவர்களுடைய வளவுக்குள் பரத்தமை நடக்க அல்லது அவர்களுடைய பாதுகாப்பில் உள்ள மகளிர் அல்லது பெண்களை கற்பழிக்க அனுமதிக்கிற ஆண்கள், பெண்கள் ஆகிய இரு சாராரும் வழக்குத் தொடரப்படுவதற்கு உட்பட்டவராவர்.

பரத்தமைக்காகப் பொது இடத்தில் ஒருவரை வலிந்தழைக்கும், அவருக்குத் தொல்லை கொடுக்கும், தடை உண்டு பண்ணும் மகளிர்மீது மட்டுமே மேற்கூறிய சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தச் சட்டத்தின்கீழ் குறிப்பாக நகரங்களில் சாதாரணமாகயிருக்கும் பெண்கள்கூட " They are all being harased " என்ற நிலையைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா? அம்மாதிரி கம்ப்ளெயின்ட்ஸ் வந்த காரணத்தால்தான் நான் இந்தக் கேள்வியைப்போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது பாதிக்கப்பட்டவர்கள் கொடுக்கின்ற புகார்கள்மீது உயர்ந்த போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். குறிப்பிட்ட பெண்கள்மீது பழிவாங்கும் நோக்கத்தோடு அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்று கருதித்தான் அந்தப் பெண்கள்மீது நடவடிக்கை எடுக்கும்பொழுது பக்கத்திலேயிருக்கும் சமூகத்திலே மிக உயர்ந்த நிலையிலிருப்பவர்களை சாட்சிகளாக வைத்து பிறகுதான் அவர்கள்மீது வழக்கு தொடர்கிறார்கள். எனவே பழிவாங்கும் நோக்கத்தோடு பயன்படுத்த வழி ஏதும் இல்லை என்றுதான் அரசு கருதுகிறது.

திரு. கோவை. செழியன் : "விபசாரம்" ஒரு பயலாஜிகல் அர்ஜ் அதிகமாக ஏற்படும்போது செய்யப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது. இந்த உணர்வுகள் வருவதற்குக் காரணமாக இப்போது பல பத்திரிகைகளில் வரக்கூடிய கதைகள், படங்கள் ஆகியவை காரணமாக இருக்கின்றன. கற்பழிப்பது சம்பந்தமான கதைகள் வருகின்றன, படங்கள் அம்மணமாகப் போடப்படுகின்றன. சிவப்பு விளக்கு எதிகிறது என்றெல்லாம் சில பத்திரிகைகள் கதைகளைப் போடுகி

ரூர்கள். இவைகளை எல்லாம் தடை செய்ய அரசு முன்வருமா? சில ஓட்டல்களில் பிஸ் கோத்தே நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அவைகளும் தடை செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அரசு கட்டாயமாக நடவடிக்கை எடுக்கும். விபசாரம் எந்த உணர்வால் ஏற்படுகிறது என்பது எனக்குத் தெரியாது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்த விபசாரத்தில் ஈடுபடக் கூடிய ஆணும் பெண்ணும் கலியாணமாகாதவர்களாக இருந்தால் அந்த ஆண் கட்டாயமாக அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், நடுவில் கைவிட்டு விட்டால் வாழ்க்கைச் செலவுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்றும் சட்டம் செய்தால் தவறு இழைப்பவர்கள் வாழ்க்கை முழுவதும் அந்தப் பெண்ணைச் சுமக்க வேண்டுமென்ற காரணத்தால் தவறு செய்பவர்கள் குறையக்கூடும் என்ற கருத்தைப் பற்றி அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இருவரும் தொடர்ந்து வாழ்க்கையில் ஈடுபடுவது என்றால் அது விபசாரமாகாது. விபசாரம் என்பது பணத்திற்காகவோ அல்லது வேறு பல நோக்கத்தோடோ செய்யப்படுகிற ஒன்றாகும். அப்படிச் செய்கிற இரண்டு பேரையும் சேர்ந்து வாழ வைக்க வேண்டுமென்றால் அதற்கு இருவரும் ஒத்துக் கொண்டால்தான் முடியும்.

கன்னியாகுமரி மாவட்டக் கிராம அலுவலர்கள்

* 228 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கிராம அதிகாரிகள் முழுச்சம்பளம் கொடுக்கப்பட்டு முழுநேர ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிராம ஊழியர்கள் அனைவரும் முழுநேர அரசு ஊழியர்களாவர். அவர்களது சம்பள விகிதம் :—

(1) வில்லேஜ் ஆபீஸர் ரூ. 160-5-240.

(2) வில்லேஜ் அஸிஸ்டெண்ட் ரூ. 150-4-170-5-225.

(3) வில்லேஜ் மேன் ரூ. 130-3-160-4-180-5-195.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இவர்களுடைய சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் இவர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இவர்கள் நிரந்தரமான ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற மாவட்டங்களிலும் இவர்களை நிரந்தரமான ஊழியர்களாக நியமிக்க அரசு வழிவகை செய்யுமா ?